## சேலம் மாநகரில் காய்கறிச் சந்தை, சாலைகளில் கழகத் தலைவர் -

# மக்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாக்குச் சேகரித்த காட்சி!

## “எங்கள் முதல்வருக்கே வாக்கு” என மக்கள் உள்ளம் மகிழ்ந்து உறுதி!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.03.2024) சேலம் மக்களவை தொகுதி கழக வேட்பாளர் டி.எம்.செல்வகணபதி அவர்களுக்கு ஆதரவாக அக்ரஹாரம் பிரதான மார்க்கெட் பகுதியில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தார். உடன் கழக மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான இரா.ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.03.2024) சேலம் மக்களவை தொகுதி கழக வேட்பாளர் செல்வகணபதி அவர்களுக்கு ஆதரவாக அக்ரஹாரம் பிரதான மார்க்கெட் பகுதியில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் கழக மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான இரா. ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.03.2024) சேலம் மக்களவை தொகுதி கழக வேட்பாளர் செல்வகணபதி அவர்களுக்கு ஆதரவாக அக்ரஹாரம் பிரதான மார்க்கெட் பகுதியில் வாக்குச் சேகரிக்கச் சென்றபோது அங்கிருந்த தேநீர் கடையில் தேநீர் அருந்தினார். உடன் கழக மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான இரா.ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர் எஸ் ஆர்.சிவலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஆர்.பார்த்திபன் ஆகியோர் உள்ளனர்.

**சேலம், மார்ச் 31 -**

**தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை 7 மணி அளவிலேயே சேலம் தொகுதி வேட்பாளர் செல்வகணபதிக்காக சேலம் மாநகரில் முக்கிய பகுதிகளான அக்ரஹாரம் காய்கறிச் சந்தையில் நடந்துச் சென்றே வியாபாரிகள், வர்த்தக பெருமக்கள் மற்றும் பொது மக்களிடம் வாக்குச் சேகரித்தார்.**

கழக வேட்பாளர் செல்வகணபதியுடன் வந்த தளபதி அவர்களை பொது மக்களும் வர்த்தகர்களும், வியாபாரிகளும், கடைகாரார்களும் முகம் மலர்ந்து பரவசத்துடன் வரவேற்ற காட்சி அனைவரையும் பரவசப்படுத்தியது. குறிப்பாக பெண்கள், பெருமளவில் முன்வந்து தளபதியிடம் உரிமையோடு பேசி மகிழ்ந்து செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சேலம் தொகுதி வேட்பாளர் செல்வகணபதி, மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான இராசேந்திரன் ஆகியோருடன் அருகிலிருந்த கடையில் தேநீர் அருந்திட சென்றபோது கடை ஊழியர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்று வழங்கிய தேநீரை அருந்தி மகிழ்ந்தார். இந்தக் காட்சியினைக் கண்ட பொதுமக்கள், ஒரு முதலமைச்சர் ஒரு மாபெரும் கட்சியின் மகத்தான தலைவர் இவ்வளவு எளிமையாக இருக்கிறாரே! என்று கூறி வியந்து மகிழ்ந்தனர். தேநீர் கடையில் திரளாகக் கூடிய கூட்டம் அலைமோதி ஆரவாரம் செய்தது.

அப்போது பொதுமக்கள், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வரும் மக்கள் நலத்திட்டங்களான, கட்டணமில்லா பேருந்து பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், இன்னுயிர் காப்போம் திட்டம் என்ற பல்வேறு மக்கள் நலத்திட்டங்களால் எங்களுடைய ஒவ்வொரு குடும்பமும், அதிலுள்ள அனைத்து குடும்ப உறுப்பினர்களும் ஒவ்வொரு விதத்தில் பயனடைந்து வருகிறோம் என்றும். வருகின்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் எங்களுடைய வாக்குகளை உதயசூரியனுக்கு அளித்து, திராவிட முன்னேற்றக் கழகம் சேலத்தில் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வோம் என்று மகிழ்ச்சி பொங்கிட உறுதி அளித்தனர்.

மேலும் அக்ரஹாரம் காய்கறிச் சந்தையில் பொதுமக்களைக் காணச் சென்ற முதலமைச்சர் அவர்களை திரளாகச் சேர்ந்து வரவேற்றனர். இது கழகத் தலைவர் மீது மக்கள் எந்த அளவிற்கு பற்றும் பாசமும் நேசமும் கொண்டுள்ளனர் என்பதை காட்டுவதாக அமைந்தது. கடைக்காரர்களிடம் நன்றி சொல்லிவிட்டு மீண்டும் மக்களுடனே தளபதி அவர்கள் நடந்து சென்றார். செல்லும் வழி எங்கும் திரண்ட மக்கள் கூட்டம் கழகத் தலைவரை வரவேற்றும், கைகுலுக்கியும், செல்பி எடுத்தும் மகிழ்ந்தனர். காய்கறி கடைகளில் இருந்தவர்கள் எல்லோரும் எழுந்து இரு கரங்களையும் கூப்பியபடி வணங்கி வரவேற்று எங்கள் வாக்குகள் உதயசூரியனுக்கே என்று தலைவரிடம் மகிழ்ச்சியுடன் கூறினர்.

பலரும் கூடி செல்பி எடுத்த போதும் அமைதியாக அவர்களுடன் பேசி மகிழ்ந்த தலைவர் அவர்களைப் பார்த்த பொதுமக்கள் இப்படி ஒரு தலைவரை நாங்கள் இதுவரை கண்டதில்லை என உள்ளம் பூரித்தனர். தளபதி அவர்களின் இந்தப் பாசத்திற்கும், எளிமைக்கும் மக்கள் 40 தொகுதிகளிலும் வெற்றியை வழங்குவார்கள். இதன்மூலம் மத்தியில் இந்தியா கூட்டணி அரசு அமைக்க ஒத்துழைப்பு தருவார்கள் என்பது உறுதியானது என்றும் கூறினார்கள்.

காலையிலேயே கூலி வேலைக்குச் செல்லும் பெண் தொழிலாளர்கள், முதலமைச்சரிடம் உங்களின் காலை உணவுத் திட்டத்தால் குழந்தைகள் எந்தவித சிரமமுமின்றி பள்ளிக்குச் செல்கிறார்கள். நாங்கள் கவலையின்றிக் காலையிலேயே வேலைக்குச் செல்ல முடிகிறது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தனர். முதலமைச்சர் அவர்கள் கழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைப் பொதுமக்களிடம் எடுத்துக் கூறி ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நடந்தவாறே வாக்கு சேகரித்தார்.

சேலத்தில் ஏற்கனவே, 11 உழவர் சந்தைகள் இருந்தன. முதலமைச்சர் அவர்கள் அண்மையில் மேலும், 2 உழவர் சந்தைகளை திறந்து வைத்தார்கள். இதற்கு காய்கறி வியாபாரிகள், முதல்வருக்கு நன்றி தெரிவித்தார்கள். சேலம் நாடாளுமன்றத் தொகுதியில் டி.எம்.செல்வகணபதியை வேட்பாளராக அறிவித்தது முதல் அவருக்கு மக்களிடம் ஆதரவு தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது. முதலமைச்சர் அவர்கள் சேலம் வருகையினால் அவரது வெற்றி மேலும் உறுதியாகிவிட்டது.

இந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கான திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு பல நல்ல திட்டங்கள் உள்ளன. இவை அனைத்தையும் நிறைவேற்றித் தர வேண்டுமென முதலமைச்சர் அவர்களிடம் பொதுமக்கள் கேட்டுக் கொண்டார்கள். மத்தியில் இந்தியா கூட்டணி ஆட்சி அமைந்ததும், நிச்சயமாக அனைத்தையும் நிறைவேற்றித் தருவோம் என்று தெரிவித்து, உதயசூரியனுக்கும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கும் வாக்களித்து வெற்றி தேடித்தருமாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டார்.